18K3T3
பொதுத்தமிழ்

# செய்யுள் (காப்பியங்கள்) உரைநடை, அலுவல் முறை மடல்கள், தமிழ் இலக்கிய வரலாறு
## பகுதி—I தமிழ்

**18K3T3**

**பருவம் III** | **கற்பித்தல்:6**
**LCI** | **தரப்புள்ளி:3**

**நோக்கம்** : 1. காப்பிய இலக்கியச் சிறப்பினைப் பயிற்றுவித்தல்

2. அலுவலகக் கடிதங்களைத் திறம்பட எழுதப் பயிற்றுவித்தல்.

**பயன்கள்**: 1. தமிழ் இலக்கியங்களையும் பல்வேறு அறிஞர்களின் உரைநடைச் சிறப்புகளையும் அறிதல்.

2. ஆட்சிமொழிச் சொற்களைப் பயன்படுத்தவும், தமிழில் அலுவலகக் கடிதங்களை எழுதவும் கற்றுக் கொள்ளுதல்.

**அலகு—1**

சிலப்பதிகாரம் - கானல் வரி காதை

மணிமேகலை - மலர்வனம் புக்க காதை

சீவகசிந்தாமணி - சுரமஞ்சரியார் இலம்பகம்

**அலகு—2**

கம்பராமாயணம் - சுந்தரகாண்டம்- இலங்கை, எரியூட்டுப் படலம்.

பெரியபுராணம் - திருநாளைப் போவார் நாயனார் புராணம்.

பெருங்கதை - கரடு பெயர்த்தது

**அலகு—3**

உரைநடை - கனவும் கற்பனையும் 1, 2, 3, 4, 5, 6, 13, 15, 16 பேராசிரியர் பி. விருத்தாசலம்

**அலகு—4**

அலுவல் முறைக் கடிதங்கள், ஆட்சிமொழிச் சொற்களை அறிதல், ஆட்சி மொழிச் சொற்கள், இணைப்பு (100 சொற்கள்)

**அலகு—5**

இலக்கிய வரலாறு - காப்பியங்கள், ஐம்பெருங் காப்பியங்கள், ஐஞ்சிறு காப்பியங்கள், புராணங்கள், பெருங்கதை

**பார்வை நூல்கள்**

1. தமிழ் இலக்கிய வரலாறு - மு. வரதராசனார்
2. நல்ல தமிழ் எழுத வேண்டுமா ?-அ.கி. பரந்தாமனார்.

## அலகு - 3

**உரைநடை** - கனவும் கற்பனையும்
1, 2, 3, 4, 5, 6, 13, 15, 16

ஆசிரியர் - பேராசிரியர் ம. ராஜேந்திராசலம்

அலகு-3 கவிதையும் கற்பனையும் — உரைநடை

பேராசிரியர். ம. விருத்தாசலம்

## 1 வீரமே வீரம்

வீரத்தின் விளைநிலமாக விளங்கிய பண்டைய தமிழ்நாடு வியக்கத் தக்க பற்பல வீரவரலாறுகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. அன்றைய தமிழன் வீரத்திற்கும் மலைக்கும் மருந்துக்குமுள்ள வேறுபாடு உண்டு என்பதனை "புலிக்குப் பயந்த பசங்கள் எல்லாம் என் மேலே வந்து படுத்துக் கொள்ளுங்கடா" என்று கூறி எள்ளி நகையாடுவார். அன்றைய தமிழன் உலகில் தான் பிறந்ததே போர் செய்யத்தான் என்று எண்ணி வாழ்ந்துள்ளனர். மேலும் தன் வாழ்நாளில் போர் செய்யாத காரணத்தால் பயன்படாது கழிந்த நாட்களோடு சேர்ந்து எண்ணி வேதனைப் படுவான்.

"விழுப்புண் படாத நாளெல்லாம் வழுக்கினுள்
வைக்கின்தன் நாளை யெடுத்து"

என்கிறது வள்ளுவம். அக்கால வீரர்களைப் "போரெனிற் புகலும் புனைகழல் மறவர்" எனப் புறநானூறு புகழும். வடநாட்டு வேந்தர்கள் தமிழரைக் கண்டு நடுங்கி இருப்பையோடு வாழ்ந்ததைத் "துஞ்சாக் கண்ண வடபுலத்து அரசே" என்ற புறநானூற்று எடுத்துக் காட்டுகிறது. சீவகசிந்தாமணியின் கதைத் தலைவனான சீவகனுடைய நண்பன் சலந்தி போர்க்களத்தில் தன் மார்பில் பாய்ந்திருந்த வேலைப் பிடுங்கி மீண்டும் பகைவர்களைக் கொன்று குவிக்கத் தொடங்கினான். இவ்வாறு ஒரு கையில் வேலை வைத்துக் கொண்டு போர் புரிந்த அண்ணலே இன்னொரு கையால் வளைந்த வாளை நெஞ்செலும்புகளுக்கிடையே கொடுத்து நிமிர்ப்பவரைக் கண்ட பகைவர்கள் அஞ்சி நடுங்கிப் புறமுதுகு காட்டி ஓடினராம். எனவே நாம் தமிழர் வீரமே வீரம், பிறரவர் வீரமும் அவ்வீரத்துக்கு ஈடாகாது என்று இன்று பெருமிதக் கூறலாம்.

# ௨. சிறுபொழுதும் பெருமதியும்

தமிழ் மொழி இயற்கையோடு இயைந்த மொழி என்பதற்கு ஆயிரம் ஆயிரம் சான்றுகள் உள்ளன. எனினும் அதனை விரைந்து அறியத் தமிழில் உள்ள பெயர்ச் சொற்களை அனைத்தையும் காரணப் பெயர், இடுகுறிப் பெயர், காரண இடுகுறிப்பெயர் என்னும் மூன்று பிரிவில் அடக்கிவிடலாம். கா, கா எனக் கரையும் ஒரு பறவைக்குக் காக்கை என்று பெயரிட்டதையும், அம்மா, அம்மா என்று அழைக்கப்படும் தாய்க்கு அம்மை என்று பெயரிட்டதையும், எந்தப் பொருளுக்கும் ஆ என்று வாயைத் திறக்கும் மனிதனது பேராசையைக் குறிப்பதற்கு அவா என்ற சொல்லும் பயன்படுத்தியிருப்பது தமிழின் இயற்கையோடு இயைந்த வாழ்வுக்குச் சான்றாகும். மேலும் வைகறை என்னும் சொல்லுக்கு ஓரிடத்தில் அசையாது தங்குதல் என்றும், இனியைக் காணுகின்ற பொழுதைக் காலை, அடுத்து வரும் பொழுது நண்பகல் என்றும் நடுவில் உள்ள பொழுது நண்பகல் எனப்படுகிறது. மயக்கத்தை உடைய பொழுது மாலை எனப் பொருள் கூறலாம். மாலைப்பொழுது என்றும் பொருள்பட மருண்மாலை என குறள் கூறுகின்றது.

யான், நீ என்று ஒருமையில் பேசிக் கொண்டவரை யாம் என்று பன்மையில் பேசுமாறு செய்தது புணர்ச்சி எனவே புணர்ச்சிக்குப் பெரிதும் வாய்ப்பான காலத்திற்கு யாமம் என்று பெயரிட்டனர். சிறுபொழுதுகளுக்குப் பெயரிட்ட பழந்தமிழ்ச் சான்றோரின் பெருமதியைப் பெரிதும் வியந்து பாராட்டத் தோன்றுகிறது.

# 3. வேலும் பாலும்

தமிழ் மொழி இயற்கையோடு இயைந்து வளர்ந்த இனிய மொழி என்பதனை சில சான்றுகள் மேலும் அறியமுடிகின்றது. பயிர்களுக்குப் பாதுகாப்பாக வேலி போடுகின்ற பழக்கம் அன்றே தோன்றியிருக்க வேண்டும். நிலப் பரப்பைச் சுற்றிப் பாதுகாப்பு அரணாக அமைந்துள்ள பொருளுக்கு வேலி என்று பெயரிட்டனர்.

பகைவரை வெல்லுவதற்குப் பயன்பட்ட ஒரு போர்க் கருவியை வேல் என்றனர்கள். கிடுகுப்படை எனப்படும் கேடயங்களை வரிசையாக அடுக்கித் தமக்கும் தம் படைவீரர்க்கும் பாதுகாப்பரண் செய்து கொள்வது பாடிவீடு என்ற செய்தி பத்துப்பாட்டில் இடம்பெறுகின்றது. கிடுகு நிரைத்து எஃகூன்றி என்னும் பட்டினப் பாலை அடியினையும் சுட்டிக் காட்டலாம்.

வேலிக்கும் வேலுக்கும் தொடர்பு இருப்பது போலவே பாலுக்கும், சோறுக்கும் பானைக்கும் தொடர்புண்டு. பால்நெய் என்னும் இரண்டு சொற்களும் இணைந்து பானெய் என்றாகும். நாளடைவில் மக்களால் பானை என்று அழைக்கப்படுவதாயிற்று.

உணவு செல்வதற்கு வழியாக இருக்கும் உறுப்பு வாய் எனப்பட்டது போல இல்லத்தில் நுழைவதற்கு வழியாக இருக்கும் இடம் இல்வாய் எனப்பட்டது. கொத்தமல்லிச் சாந்து ஆகியவற்றைக் குழப்பிச் செய்வது குழம்பாயிற்று. மேலும் குழம்பையும், சோற்றையும் தன்னகப்படுத்தும் கருவி அகப்பை ஆயிற்று. பொருள்களைச் சுரண்டி எடுக்கும் கருவி கரண்டி ஆயிற்று. அடுதல் என்னும் தொழிற் பெயரும் தல் விகுதிக்கு மாறாகப் பு விகுதி பெற்று அடுப்பு என்றும் மாறியது.

பண்டைத் தமிழர் பொருள்களுக்குப் பெயரிட்ட இம்முறையைக் கூர்ந்து நோக்கிச் செயல்படுவதால் செந்தமிழ் தன் தனித்தன்மையைப் பெற்றிருப்பதனை அறியமுடிகின்றது.

# 4. தாய்மையின் ஆற்றல்

பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் எழுதிய நூல்களுள் குடும்ப விளக்கு தனிச்சிறப்புடையது. இன்பம் நிறைந்த குடும்ப வாழ்வை இவ்வளவு சுவைபட விளக்குகின்றார். அது போல் பெருநடை நடக்கும் காளை ஒருவன் அவன் பெயர் வேடப்பன் வேடப்பன் மாளிகை வைத்து வாணிகம் செய்து வாழ்ந்து வந்தான் அவனுக்கு நகைமுத்து என்னும் நங்கை நல்லாள் மனைவியாகி அவன் மனைவாழ்வை மாண்புறச் செய்தாள். அவரது இன்ப வாழ்வின் மொத்த உருவமாக அழகிய குழந்தை ஒன்று பிறந்தது. குழந்தையை ஆவலோடு எடுக்க விரைந்தான் முரட்டுத்தனமாக தூக்க வருகிறானே என்று நகைமுத்து முகத்தில் வெகுளி பிறந்தது. வேடப்பன் மனைவியைப் பார்த்து எனக்குப் பிள்ளை தூக்கும் முறை எது என்பதைக் கற்றுக் கொடு என்று கெஞ்சிக் கேட்டானாம்.

குயவன் ஆய்வாயிருந்து மட்பாண்டங்களைப் பார்த்து எடுப்பது போல் பிள்ளை பெற்ற பெண்களாகிய எங்களால்தான் இளங்குழந்தைகளை எளிதாக தூக்க முடியும் என்றாள் நகைமுத்து. மேலும் தன் தலைவனைப் பார்த்து குளத்திலே பூத்த தாமரைப்பூப் போன்றது குழந் உடல் தாமரைத் தண்டு அதன் பூவின் தாங்காமல் வளைவது போலக் குழந்தையின் உடலும் தலையைத் தாங்கும் ஆற்றல் இல்லாமல் துவளும். என்கிறாள். ஒரு நாள் இரவில் வேடப்பன் கண் விழித்தான். மனைவியை எழுப்ப முயன்றான் அவள் தூக்கம் கலையாமல் தூங்கிக் கொண்டே இருந்தாள். பின் குழந்தையை எழுப்ப முற்பட்டான். மலர் ஒன்றை குழந்தை மேல் போட்டான். அவள் தடுத்து குழந்தை மேல் படாமல் பாதுகாத்த உணர்வினைக் கண்டு தாய்மைக்கு வணக்கம் செய்தான். தலைமட்டும் இரண்டு என்றாலும் தாயும் குழந்தையும் ஒரு நிலையைச் சேர்ந்தோரே தாய்மையின் ஆற்றல் எத்துணைப் பெரிது என்பதனை உணர்ந்தான் தலைவன்.

# 5. காது குத்துதலும் தமிழர் வீரமும்

காது குத்திக் காதணி விழா நடத்துவது இன்று தமிழகத்தில் பெருவழக்கமாக நடைபெற்று வருகிறது. ஒருவன் இறந்துவிட்டால் அவனது உயிர் நீத்த உடலை இடுகாட்டுக்கு எடுத்துச் சென்று அங்குக் கருவேல முள்ளால் காது குத்தி அதன் பின்னரே அவ்வுடலைப் புதைப்பர். இவ்வாறு இறந்தவருக்கும் காது குத்தும் வழக்கம் இன்றுவரைத் தமிழரிடையே நடைமுறையில் உள்ளது. பேராசிரியர் சி. இலக்குவனார் சங்க இலக்கியம் என்ற நூலில் போர்க்களத்தே புறமுதுகு காட்டாது வீரமுடன் போரிட்டு இறந்த வீரர்கள் தேவர்களாகித் துறக்கவுலகம் செல்வர் என்பது பழந்தமிழர் நம்பிக்கை. மேலும் இறந்தவர் உடலை இருகூறாகப் பிளந்து அடக்கம் செய்வர். வளர்ச்சி பெறாத குழந்தை, தசைப்பிண்டமாக பிறந்த குழந்தையின் உடலையும் இரண்டாகப் பிளந்துதான் நல்லடக்கம் செய்வர். இச் செய்தியினை புறநானூற்றுப் பாடல்களால் அறிய முடிகின்றது. பாவேந்தர் பாரதிதாசன் நாட்டுக்காக உயிர்துறப்பது போற்றிப் பாராட்டத்தக்கது மேலும் குறிக்கோள் மட்டும் உயர்ந்ததாக இருந்தால் போதாது. குறிக்கோளை அடையும் வழியும் உயர்ந்ததாக இருக்க வேண்டும் என்கிறார். காது குத்துதல் என்னும் பற்றி கூறும் பொழுது நாட்டுக்காக மகிழ்ச்சியுடன் உயிர்துறந்த பழந்தமிழரது உயர்ந்த மனப்பான்மையும், மறவுணர்வும் இடைக்காலத்தில் குறைந்தன. தமிழும் தமிழரும் மீண்டும் உயர்வு பெற வேண்டுமானால் மூடநம்பிக்கை அற்ற அறிவும் நாட்டுக்காகத் தம்மையே இழக்கும் மனத் துணிவும் மாணவர்பால் ஏற்பட வேண்டும்

# 6. நட்டார்க்குத் தோற்றல்

காலமும் இடமும் அறிந்து செயல்பட்டால் ஞாலம் முழுவதையும் வெல்லலாம் என்பது வள்ளுவர் வாக்கு. ஒருவருடைய எண்ணம் செயலாக உருப்பெற வேண்டுமானால் என்னால் முடிந்ததைச் செய்து விட்டேன். இனிக் கடவுள் விட்டவழி என்று இருக்கக்கூடாது. எண்ணியதை எண்ணியாங்கு செய்துமுடிக்கும் வழியாகும் என்பது வின்ஃஸ்டன் சர்ச்சில் கூறிய பொன்மொழி. இல்லற வாழ்வு இனிய வாழ்வாக அமைய வேண்டுமானால் வீட்டுத் தலைவன் தன் மனைவியிடமும் மக்களிடமும் தோற்றுப் போகவேண்டும். தோல்வியான் தொடக்க என்பது குடும்ப வாழ்க்கையைப் பொறுத்த வரை முற்றிலும் உண்மை என்கின்றது குறள். சேரலாதன் தன் மனைவி கோப்பெருந்தேவியின் கையாலறைந்த மலரைப் பெற இரந்து நின்ற செய்தியினை பதிற்றுப்பத்தில் அறியமுடிகின்றது.

மேலும் தாம்சார்ந்த இனமும் நாடும் வாழ்வதற்காகத் தம்முடைய உரிமைகளையும் பெருமைகளையும் இழப்பவர் நல்ல தலைவர் ஆவார். என்பதனை பாவேந்தரும் குறிப்பிடுகின்றார். பிறருக்குத் தொண்டு செய்வதையே தன்னுடைய குறிக்கோளாகக் கொள்ள வேண்டும் என்பதும். தோற்றுப் போவது மனக்கேடு என்பது உண்மையேயானாலும் உலகு வாழத் தனிமனிதன் தோற்றுப் போவது தலைசிறந்த மனிதப் பண்பாகும்.

(13) 7. யானையின் தந்திரம்

சேர, சோழ, பாண்டியராகிய தமிழகத்து மூவேந்தர் மூவருமே பாடிவரும் புலவர்க்கெல்லாம் பெரும் பரிசில் தந்து தமிழை வளர்த்தனர் என்பது உண்மையே. நல்ல தமிழ் பாடும் தென்பாண்டித் திரு நாட்டில் வாழும் தமிழர்கள் சூழ்ச்சிகளில் வல்லவராய் விளங்கி வந்தனர். இவர்களது யானைகளும் தந்திர உத்தியுடன் செயல்பட்டன. மாபெரும் வேந்தனாகிய பாண்டியனின் பட்டத்து யானை தோற்றத்தில் மலையைப் போன்றது. அக்களிறு பிளிறுகின்ற ஓசையினைக் கேட்டோர் இப்பெருங்கடலே பொங்கி வந்து முழங்குகின்றதோ என்று ஐயுறுவர். இத்தகைய பேராற்றல் படைத்த பாண்டியன் களிறு போர்க்களத்தில் பகைவரை மோதியல் முட்டிக் வெற்றியென்ற கன்னியைப் பயனாகப் பெற்ற இச் செய்தியினை முத்தொள்ளாயிரம் விளக்குகின்றது. போரில் களிற்றின் கோடு சிதைந்ததால் இதனை மறைப்பதற்கு பகை மன்னரின் குடல்களை மாலைப் போல் தன் சிதைந்த கோட்டில் அணிந்து கொண்டு பிடி முன்பு சென்றது. இவ்வாறு தன் கோடு சிதைந்த அழகுக் குறைபாட்டால் தன் பிடிக்கு ஏற்பட இருந்த வருத்தத்தை ஏற்படாமல் செய்த தந்திரம் பாண்டியன் களிற்றுக்கன்றி வேறு யார் களிற்றுக்கு வரும் என்ற இச்செய்தியினை முத்தொள்ளாயிரம் குறிப்பிடுகின்றது.

## (15) 8. ஆற்றுவார் ஆற்றல் பணிதல்

உலகம் தோன்றிய நாளிலிருந்து மக்கள் இனிது வாழ்வதற்கு உரிய வாழ்க்கை நெறிமுறைகளை எடுத்துக்கூறிய சான்றோர் பலராவர். அவருள் திருக்குறளை எழுதிய வள்ளுவர் கூறும் கருத்துக்கள் மக்கள் மனதில் எளிதில் பதியும் விதமாக அமைகின்றது. தமிழர்கள் ஈகைப் பண்புடன் வாழ்ந்தனர் என்பதனை நலங்கிள்ளி போர்முனையில் நின்று வஞ்சினங் கூறிய போது என்னுடைய காலடியில் விழுந்து வணங்கிப் பணிந்து வேண்டுவோர்க்கு என் நாட்டை மட்டும் அல்ல என் இனிய உயிரையும் மகிழ்ச்சியுடன் கொடுப்பேன் என்ற செய்தினை புறநானூறு மூலம் அறியமுடிகின்றது. மேலும் குமணனின் கொடைத் தன்மையினை என்னுடைய தலையை வெட்டிக் கொண்டு போய் இளங்குமணனிடம் தந்து பரிசில் பெற்றுக் கொள்க என குமணன் புலவனிடம் கூறும் செய்தியினை புறநானூறு விளக்குகின்றது. மேலும் இரத்தலின் இழிவையும் ஈதலின் உயர்வையும் வல்வில் ஓரியைக் கழைதின் யானையார் சிறப்பித்துக் கூறுகின்றார். காலம் தாழ்த்தி தண்ணீர் கொடுத்த காவலனிடம் தண்ணீர் பெறாமல் உண்ணா நோன்பிருந்து உயிர்துறந்த சேரனின் மான உணர்ச்சியினை எடுத்துக்காட்டுகின்றது.

சான்றோர் பகைமையை ஒழிப்பதற்கு பணிந்து செயல்பட வேண்டும் என்கின்றனர். பிறர் தமக்குச் செய்த துன்பங்களைப் பொறுத்துக் கொள்வதும் தாம் பிறர்க்குத் துன்பங்கள் செய்யாமையும் தவத்திற்கு இலக்கணமாகும் இந்நெறியைப் பின்பற்றும் பொழுது உலகில் அமைதி தவழும் என பாரதிதாசன் கூறுவது மூலம் அறியமுடிகின்றது.

## (16) 1. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

அமிழ்தினும் ஆற்ற இனிய நம் அன்னைத் தமிழைத் தாய் மொழியாகக் கொண்டோர் தமிழ்நாட்டிலும், ஈழத்திலும் மட்டுமன்றி உலகில் ஐம்பதிற்கும் மேற்பட்ட நாடுகளில் வாழ்கின்றனர். பண்பாட்டுச் சிறப்புமிக்க தமிழர்கள் மக்கள் உயிர்களை மட்டுமன்றி ஓரறிவு முதல் ஐந்தறிவு வரையுள்ள அஃறிணை உயிர்களைக் கூடத் தம் உடன் பிறந்தவையாகக் கருதுவர். இதனை தொல்காப்பிய மரபியல் நூற்பாவே சான்றாகும். பாரதியார் உலகத்து உயிர்கள் அனைத்தும் ஒன்றுடன் ஒன்று அன்புகொண்டு இன்புற்று வாழ வேண்டும் என இறைவனிடம் வேண்டுகின்றார்.

ஈழத்தில் வாழ்ந்த மக்கள் பஞ்சத்தால் வாடிய போது தமிழ்நாட்டில் வாழ்ந்திருந்த ஏலேல சிங்கன் என்னும் வள்ளல் உதவினான் என்பது வரலாறு. மகாபாரதப் போர் காரணமாக வட நாட்டில் பஞ்சம் ஏற்பட்டது. இதனை உதியன் சேரலாதன் சோறு போடுவதற்கு அரிசியும், நெல்லும் அனுப்பி உதவி செய்தான் என்கிறது புறநானூறு. உலகில் எந்த நாட்டில் யார் துன்புற்றாலும் ஓடோடிச் சென்று உதவுவது தமிழர் பண்பாகும். ஆனால் அரைகுறை மனத்துடன் உதவி செய்பவரும் இருந்து வாழ்கின்றனர். இந்நிலை மாறி உலகத்தவர் ஒன்றுபட்டு வளமை பெற்று, உரிமை பெற்று உயர்வு பெற்று வாழ வேண்டும் என்பது பாரதிதாசனின் விருப்பமாக கூறுகின்றார்.

# அலகு – 4

## ஆட்சிச் சொற்கள் :-

Acquittance Roll – ஊதியப் பட்டியல்
Administraton Report – ஆட்சி அறிக்கை
Agenda – நிகழ்ச்சி நிரல்
Allotment – பங்கீடு
Amendment – திருத்தம்
Anatomy – உடல் கூற்றியல் நூல்
Annual return – ஆண்டு நடைமுறை விவரம்
Anthropology – மனித இன இயல்நூல்
Appointment order – அமர்த்தாணை
Apprentice – பயிற்சியாளர்
Assessment – மதிப்பீடு
Auditor – தணிக்கையாளர்
Auditor general – தலைமைத் தணிக்கையாளர்
Authorisation – இசைவாணை கொடு
Bactriology – கிருமி இயல் நூல்
Basic Training School – அடிப்படைக் கல்விமுறைப் பயிற்சிப்பள்ளி
Batterment Tax – இடவளர்ச்சி வரி
Boarding & Lodging – உண்டுறை வசதி
Break – இடைநிறுத்தம்
Causal Leave – நேர்வு விடுப்பு
Census – மக்கள் தொகைக் கணக்கு

Chalan - செலுத்துச்சீட்டு

Cheque - crossed - கீறிய காசோலை

Citizenship - குடியுரிமை

Commerical Tax - வணிகவரி

Communist - பொதுவுடைமையாளர்

Conference - மாநாடு

Contractor - ஒப்பந்தக்காரர்

Copy right - பதிப்புரிமை

Correspondence - கடிதப்போக்குவரத்து

Counterfoil - அடிச்சீட்டு

Covering Letter - உடனிணைப்பு கடிதம்

Credit - வரவு / கடன்

Credit Balance - வரவு பாக்கி

Criminal investigation Department - குற்ற ஆய்வுத்துறை

Curfew - ஊரடங்கு உத்தரவு

Customs duty - இறக்குமதிச் சுங்கவரிகள்

Cyclostyle - படிவெடுக்கருவி

Dearness allowance - பஞ்சப்படி

Debit - பற்று

Deficit - பற்றாக்குறை

Draft - வரைவு

Drainage Scheme - நீர்வடிகால் திட்டம்

Earned Leave - ஈட்டிய விடுப்பு

Editor - இதழாசிரியன்

Endowment - அறநிலைக்கொடை நிலையம்

Endorsement - மேலொப்பமிட்டல்

Entomology - பூச்சி இயல் நூல்
Entries - பதிவுகள்
Establishment - பணியமைப்பு
Estate duty - சொத்து வரி
Expenditure tax - செலவு வரி
Express Delivery - விரைவு அஞ்சல்
Extra ordinary leave - இயல்பு புறம்பு விடுப்பு
File - கோப்பு
Fortnightly Magazine - திங்களிருமுறை வெளியீடு
Geology - தரை இயல் நூல்
Gift Tax - கொடை வரி
Governor - மாநில ஆளுநர்
Gratuity - பணிக்கொடை
Health officer - நல அலுவலர்
Honorrium - கௌரவப் பணியின் மதிப்பு
Horticulture - தோட்டக்கலை
Hydro Electric Scheme - நீர்மின் திட்டம்
Indent - தேவைக்குறிப்பு
Lease - குத்தகை
Ledger - பேரேடு
Licence - உரிமம்
Lien - உரிமை விடுப்பு
Limited Company - வரையறுத்த நிறுவனம்
Lower Division Clerk - கீழ்நிலை எழுத்தர்
Mainenance Grant - நிர்வாக உதவிப்பணம்
Manager - மேலாளர்
Media - ஊடகம்
Minute Book - கூட்ட நிகழ்ச்சிக் குறிப்பேடு
Monitor - கண்காணிப்பான் திரை

Mortagage – அடகு வைத்தல்

National Extension Scheme – தேசிய வளர்ச்சித் திட்டம்

Non-basic Training School – மரபுமுறைப் பயிற்சிப் பள்ளி

Non-Gazetted officer – அரசிதழ் பதிவு பெறா அலுவலர்

Out Post – புறக்காவல்

Outstanding Expenses – செலுத்த வேண்டிய செலவுகள்

Over-draft – மிகைப்பற்று

Overtime fees – மிகைநேர ஊதியம்

Over seer – மேற்பார்ப்பவர், பார்வையாளர்

Parcel Post – கட்டு அஞ்சல்

Pay Bill – சம்பளப்பட்டியல்

Pension – ஓய்வு உதவித்தொகை

Personal File – தனியாள்குறிப்பு நிலை மறைப்பது

Proof – அச்சுப்படி

Provident Fund – காப்பு வைப்பு

Publishing house – பதிப்பகம்

Recommendation – பரிந்துரை

Records – ஆவணங்கள்

Record keeper – ஆவணக் காப்பாளர்

Reminders – நினைவூட்டுகள்

Register office – ஆவணக்களரி

Registered Post – பதிவஞ்சல்

Remittance – செலுத்திய தொகை

Reporter – செய்தியாளர்

Reservation – ஒதுக்கீடு

Revenue Stamp – அரசிறைத் தலை

Royalty - உரிமைத் தொகை
Railway Level crossing - இருப்புப்பாதை கடவிடம்
Sales Tax - விற்பனைவரி
Service Register - பணிப்பதிவேடு
Small Scale Industries Scheme - சிறுகைத்தொழில் திட்டம்
Socialist - சம உடைமையாளர்
Stadium - விளையாட்டரங்கு
Stationary - எழுதுபொருள்கள்
Super Tax - மேல்மிகுவரி
Superintendent - கண்காணிப்பாளர்
Supervisor - மேற்பார்வையாளர்
Suspense Account - தணிக்கல் சோக் கணக்கு
Symbol - குறியீடு
Travellers Bungalow - வழிப்போக்கர் விடுதி
Travellers cheque - பயணிகள் காசோலை
Trust - பொறுப்பு நிலையம்
Upper division Clerk - மேல்நிலை எழுத்தர்
Urgent File - உடனடி அவசரக் கோப்பு
Under ground Drainage system - புதைவடிகால் திட்டம்
Union Public Service commission - கூட்டரசு ஊழியர் தேர்வாணைக் கழகம்
Vendor - விற்பவர்
Voucher - உறுதிச்சீட்டு
Wagon - சரக்குவண்டி
Water Supply Scheme - நீர்வழங்கு திட்டம்
Working Capital - பயன்படும் மூலதனம்

working partner — உழைப்புக் கூட்டாளர்

write off — தள்ளுபடி செய்தல்

zero hour — ஏதேச்சைய செயலினைத் துவங்குவதற்குக் குறிக்கப்பெற்ற காலக்கெடு.

zonal — மண்டலம் சார்ந்த

zone — மண்டலம்.

துணை நூல்பட்டியல்

செய்யுள் திரட்டு — குந்தவைநாச்சியார் அரசினர் மகளிர் கலைக்கல்லூரி தஞ்சாவூர். 2018 – 2021

அலகு - 4 அலுவல் முறைக் கடிதம்

மாதிரி படிவம்

## மாற்றுச் சான்றிதழ் வேண்டி விண்ணப்பம்

அனுப்புநர்:

சி. கோகுலவர்த்தினி
வேதியியல் துறை இரண்டாமாண்டு
குந்தவை நாச்சியார் அரசு மகளிர் கலைக் கல்லூரி
தன்னாட்சி,
தஞ்சாவூர்.

பெறுநர்:

முதல்வர் அவர்கள்
குந்தவை நாச்சியார் அரசு மகளிர் கலைக் கல்லூரி
தன்னாட்சி,
தஞ்சாவூர்.

பொருள் :- மாற்றுச் சான்றிதழ் வேண்டி விண்ணப்பம் விண்ணப்பித்தல்.

வணக்கம்,

அம்மா, நான் வேதியியல் துறையில் இரண்டாமாண்டு பயின்று வருகின்றேன். தற்பொழுது என் தந்தையின் பணி மாற்றம் காரணமாக வெளியூர் செல்வதால் தயவு கூர்ந்து மாற்றுச் சான்றிதழ் கொடுத்து உதவும்மாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி.

இப்படிக்கு
தங்கள் கீழ்ப்படிந்துள்ள
மாணவி
சி. கோகுலவர்த்தினி

## அலகு – 5

### காப்பியம்

காப்பியங்கள் பெருங்காப்பியம், சிறுகாப்பியம் எனப் பகுக்கப்பெறுகின்றன. தண்டியலங்காரம் பெருங்காப்பியத்திற்கு ஒரு வரையறையை அளித்துள்ளது.

அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பொருளைப் பெற்றிருக்க வேண்டும். இது பெருங்காப்பியம்.

சிறுகாப்பியம் அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கனுள் ஒன்றோ சிலவோ குறைந்தும் அமையலாம்.

### ஐம்பெருங் காப்பியங்கள்

தமிழில் பெருங்காப்பியங்களாகச் 1. சிலப்பதிகாரம் 2. மணிமேகலை 3. சீவகசிந்தாமணி 4. வளையாபதி 5. குண்டலகேசி என்ற ஐந்து நூல்கள் குறிக்கப் பெறுகின்றன.

### 1. சிலப்பதிகாரம் :

நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்று பாரதியாரால் சிறப்பிக்கப்பெற்ற இந்நூல் தமிழ்மொழியில் தோன்றிய முதல் காப்பியமாகும். இந்நூலை இளங்கோவடிகள் இயற்றியுள்ளார். இவர் சேரன் செங்குட்டுவனின் இளவல் ஆவார். 5001 அடிகள் கொண்டது.
இக்காப்பியம்

நிலைமண்டில ஆசிரியப்பாவால் ஆனதால். மூன்று காண்டங்களையும், 30 காதைகளையும் உள்ளடக்கிய சிலம்பிற்கு அரும்பத உரையாசிரியர், அடியார்க்கு நல்லார் போன்றோர் உரை எழுதியுள்ளனர்.

குடிமக்கள் காப்பியம் எனக் கூறுவர். சமண சமயத்தைச் சார்ந்தவர் இளங்கோ அடிகள் ஆவார்.

சிலம்பின் அடிப்படைக் கோட்பாடு

"அரசியல் பிழைத்தோர்க்கு அறம்கூற்று ஆவதூஉம்
உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்,,
ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும் என்பதூஉம்

கதைக்கரு :-

கோவலன் கண்ணகியை மணந்தான். ஆடல் அழகி மாதவியிடம் தஞ்சமடைந்தான். கண்ணகியை மறந்தான். ஆண்டுகள் பல கடந்தன. கோவலனுக்கும் மாதவிக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டு இருவரும் பிரிந்தனர். பின்பு கோவலன் கண்ணகியுடன் மதுரைக்குச் சென்று பொற்கொல்லனின் சூழ்ச்சிக்கு ஆட்பட்டான். கள்வன் எனக் குற்றம் சாட்டப்பட்டுக் கொலையுண்டான். பாண்டியனிடம் கண்ணகி வழக்குரைத்தாள். வீரப் பெண்ணாகவும் மாட்சி செய்தாள். சேரநாடு சென்று கண்ணகி விண்ணுலகம் புகுந்தாள். கண்ணகிக்கு சேரன் செங்குட்டுவன் சிலைவடித்துக் கோயில் கட்டிச் சிறப்பு செய்தான்.

## மூன்றால் சிறப்பு பெற்ற சிலம்பு :-

(அ) சிலம்பு சிறப்பிக்கும் வேந்தர் மூவர் (சேரன், சோழன், பாண்டியன்)

(ஆ) சிலம்பு வலியுறுத்தும் உண்மைகள் மூன்று (அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்று .....)

(இ) தலைமைப் பாத்திரங்களான கோவலன், கண்ணகி, மாதவி மூவர்.

(ஈ) சிலம்பில் அமைந்த தமிழ் மூன்று (இயல், இசை, நாடகம்)

(உ) சிலம்பின் பெரும் பிரிவுகள் மூன்று (புகார்க்காண்டம், மதுரைக்காண்டம், வஞ்சிக்காண்டம்)

முதல் காப்பியம், குடிமக்கள் காப்பியம், சித்திரக் காப்பியம், மூவேந்தர் காப்பியம், உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் என்றெல்லாம் போற்றப்படும் இக்காப்பியமாகும்.

சிலப்பதிகாரம் கி.பி. 2ஆம் நூற்றாண்டில் தோன்றிய நூலாகப் போற்றப்படுகிறது.

அக்கால மக்களின் பழக்கவழக்கங்கள், பண்பாடு, நாகரிகம், அரசியல், அறிவியல் என்று பல்வேறு செய்திகளை உணர்த்தும் பெட்டகமாகச் சிலம்பு காணப்படுகிறது.

## 2. மணிமேகலை

காப்பியங்களின் இரண்டாவதாக வைத்து எண்ணப்படும் மணிமேகலை 4286 பாடல்களும் 30 காதைகளும் உடையது. இதன் ஆசிரியர் சீத்தலை சாத்தனார். மணிமேகலைத் துறவு என்ற பெயரும் இந்நூலுக்கு உண்டு.

நிலைமண்டில ஆசிரியப்பாவால் ஆனது. பௌத்த சமயத்தைச் சார்ந்தது. கண்ணகியின் மரபில் வந்த மணிமேகலையைத் தன் காப்பியத் தலைவியாக்கி புரட்சி செய்தார் சாத்தனார். காப்பியத் தலைவியின் பெயரையே தன் காப்பியத்திற்கும் இட்டு மகிழ்ந்தார்.

### கதைக்கரு

மாதவி தன் மகளைக் கண்ணகியின் மகளாகவே அதை வளர்த்தாள். கோவலன் கொலை செய்யப்பட்டதை அறிந்த மாதவியும், அவள் மகள் மணிமேகலையும் பௌத்த மதத்தில் சேர்ந்து துறவு வாழ்க்கையை மேற்கொண்டனர். மணிமேகலை தெய்வத்தால் மணிபல்லவத் தீவுக்குச் சென்றாள். பழம் பிறப்பு உணர்ந்தாள். அமுதசுரபி பெற்று பசிப்பிணி போக்கினாள். உதயகுமரன் இவள்மேல் காதல் கொண்டான் பின்பு ஒருவனால் கொலை செய்யப்பட்டான். இதனால் மணிமேகலை சிறையடைக்கப்பட்டாள். சிறைக்கோட்டத்தை அறக்கோட்டமாக மாற்றினாள். அறவண அடிகளின் ஆசிபெற்று அவரிடம் பௌத்த தருமம் கேட்டுத் தவம் மேற்கொண்டாள்.

பரத்தமை, மது, கொள்ளை, கொலை போன்றவை கூடாது என்று வலியுறுத்திக் கூறுவதால் சிறந்த காப்பியமாகத் திகழ்கிறது.

பழம்பெருமை வாய்ந்த மாதவி உயர்குடிப் பிறப்பு மற்றும் கல்வி, மென்மை உடைய அழகை அழிக்கும் மணிமேகலை பிறர் கடையாயாயால் பிச்சை எடுத்த நிகழ்வும் என்பதை கூல வாணிகன் சீத்தலைச்சாத்தனார் காப்பியத்தில் சித்தரித்துள்ளார்.

'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே'

3. சீவகசிந்தாமணி:

ஐம்பெருங்காப்பியங்களில் மூன்றாவதாக வைத்துப் போற்றப்படும் இக்காப்பியம் 3147 பாடல்களும், 13 இலம்பகங்களும் கொண்ட விருத்தப்பாவால் திருத்தக்க தேவர் இயற்றியுள்ளார். நச்சினார்க்கினியரால் முதன் முதலில் நூல் முழுமைக்கும் உரை வகுக்கப்பட்ட பெருமைக்குரியது.

இதன் ஆசிரியர் திருத்தக்கதேவர் சோழர் குடியில் தோன்றியவர். சமண சமயத்தைச் சார்ந்தவர். 'நரிவிருத்தம்' என்ற வேறு நூலும் எழுதியுள்ளார். சீவகசிந்தாமணிக்கு 'மணநூல்' என்ற வேறு பெயரும் உண்டு. காப்பிய தலைவன் 'சீவகன்' ஆவான். நாமகள் இலம்பகம் முதல் முத்தி இலம்பகம் வரை இடம்பெற்றுள்ளவற்றில் சீவகன் அவன் நாட்டின் வளம், சிறப்புகளைக்கும் ஆசிரியர் அழகாக வடித்தியம்பியுள்ளார்.

கதைக்கரு

ஏமாங்கத நாட்டு மன்னன் சச்சந்தன் தன் மனைவி விசயை என்பவளிடம் அளவற்ற காதல் கொண்டு அந்தப்புரத்தையே வாழ்விடமாகக் கொண்டான். ஆட்சியை மறந்தான். அச்சமயத்தில் கட்டியங்காரன் ஆட்சியை பறித்தான். மயில்பொறியால் விசயை உயிர் தப்பினாள். சுடுகாட்டில் சீவகன் பிறந்தான். பின்பு கந்துக்கடன் எனும் வணிகன் சீவகனை வளர்த்து கல்வி, கேள்வியில் சிறந்தவனாக உருவாக்கினான். சீவகன் எட்டுப் பெண்களை மணந்தான். நாட்டைக் கைப்பற்றினான் சீவகன் இறுதியில் துறவு பூண்டான்.

4. வளையாபதி

இந்நூல் முழுமையும் நமக்குக் கிடைக்கவில்லை 'புறத்திரட்டு' என்னும் தொகுப்பு நூலில் 66 பாடல்களும் உரையாசிரியர்களின் மேற்கோள் பாடல்களிலிருந்து சில பாடல்களும் கிடைத்துள்ளன.

வளையாபதியின் ஆசிரியர் யார் என்று தெரியவில்லை. விருத்தப்பாவால் அமைந்த இந்நூல் சமணக்காப்பியமாகக் கருதப்படுகிறது.

கதைக்கரு

நவகோடி நாராயணன் என்பவன் வைர வணிகன். அவன் பிற்பட்ட குலத்தைச் சார்ந்த பெண்ணை மணந்தான். இதனால் வணிக குலத்தினர் இவனை வெறுத்தனர். அவன் அவளை விட்டுப் பிரிந்து வேற்று நாடு சென்றான். பின்பு தன் குலப்பெண் ஒருத்தியை மணந்து

வாழ்ந்து வந்தான். சித்தரையின் மகன் தன் தந்தையர் என்பதை அறிந்து தன் தாயிடம் தந்தையைச் சேர்க்கிறான்.

5. குண்டலகேசி:-

குண்டலகேசியின் ஆசிரியர் நாதகுத்தனார். கி.பி. 10ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இந்நூல் விருத்தப்பாவால் ஆனது. பௌத்த சமயக் காப்பியம். இந்நூலில் 19 பாடல்கள் மட்டுமே கிடைத்துள்ளன. வேறு பெயர் 'குண்டலகேசி விருத்தம்'. நீலகேசிக்கு எதிராக (மறுப்பாக) தோன்றிய நூல் குண்டலகேசி.

பத்திரை என்பவள் பௌத்த சமயத்தில் துறவு மேற்கொண்டபோது தலைமயிரைக் களைந்தாள். அத்தலைமயிர் மீண்டும் வளர்ந்தபோது சுருள் சுருளாக வளர்ந்து தொங்கியது. சுருள் முடியினாள் குண்டலகேசி என்று அவள் எனப்பெயரிட்டும் அழைக்கப்பட்டாள். இக்காரணத்தினாலேயே இந்நூலும் இப்பெயர் பெற்றது.

கதைக்கரு

வணிக மரபில் தோன்றிய பத்திரை காளன் என்னும் கள்வனைக் காதலித்து மணந்தாள். ஒரு நாள் ஊடல் காரணமாக அவளைத் தீயவள் என்றான். அவன் மலை உச்சிக்கு அழைத்துச் சென்றான் அவள் அவனை வலம் வர வேண்டும் என்று வேண்டினாள் பின்பு வலம் வந்து அவனைக் கீழே தள்ளிக் கொன்றாள். பின்னர் துறவு மேற்கொண்டு சித்தி பெற்றாள். 7

## ஐஞ்சிறு காப்பியங்கள் :-

அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கும் நிறைவுப் பெற்றது பெருங்காப்பியம். இவற்றுள் ஒருதலைப் ஒன்றோ அல்லது அதற்குமேல் குறைந்தோ இருந்தால் அது சிறுகாப்பியம் எனப்படும்.

1. உதயணகுமார காவியம்
2. நாககுமார காவியம்
3. யசோதர காவியம்
4. நீலகேசி
5. சூளாமணி

ஆகிய ஐந்தும் ஐஞ்சிறுகாப்பியங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

### 1. உதயண குமார காவியம்

இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. உதயணன் என்ற மன்னனின் கதையை உரைத்தமையால் கூறுவது. 167 பாடல்களைக் கொண்ட இந்நூல் 6 காண்டங்களை உடையது.

சமணசமயத்தைச் சார்ந்த நூல். காலம் 15ஆம் நூற்றாண்டு என்பர்.

உதயணன் பிரச்சோதனன் பட்டத்து யானையை அடக்கி, அவன் மகள் வாசவதத்தைக்கு யாழ் கற்றுக் கொடுத்து, அவளைக் காதலித்து

மணம் செய்து கொள்கிறான். இறுதியில் அரசைத் துறந்து துறவியாகிறான். அவனது நாட்டு மன்னன், பிரச்சோதனன் என்ற பொய் யானையின் மூலம் வத்தவ நாட்டைக் கைக்கொள்ள நினைத்த மன்னன் உதயணனைச் சிறைப்படுத்துகிறான். பின் உதயணன் நண்பன் யூகி என்பவன் உதவியால் சிறையிலிருந்து தப்புகிறான்.

## 2. நாககுமார காவியம் :

நாககுமாரன் கதை கூறும் இந்நூல் விருத்தப்பா-வால் ஆனது. ஆசிரியர் பெயர் அறியப்படவில்லை. 170 பாடல்களையுடைய இந்நூல் 5 சருக்கங்களைக் கொண்டது. சமண சமயத்தைச் சார்ந்த இந்நூலின் காலம் கி.பி. 16ஆம் நூற்றாண்டு என்பர்.

நாககுமாரனின் பிறப்பு, வளர்ப்பு, கல்வியின் மேன்மை போன்றவை கூறப்பட்டுள்ளன. மகத நாட்டு மன்னன் சிரேணிகன். அவன் மனைவி சாலினி. இவர்கள் வரவேற்றதை விபுலமலையில் வாழ்ந்தவர் அறவுரைகளை இவர்களுக்கு (சிரேணிகன், சாலினி) எடுத்துரைக்கின்றார்.

## 3. யசோதர காவியம் :

யசோதர காவியம் என்னும் இந்நூல் விருத்தப்பாவால் ஆனது. ஆசிரியர் வெண்ணாவலூர் உடையார் வேள். சமண சமயம். 320 பாடல்களும் 5 சருக்கங்களையும் உடையது.

அசோகன் என்ற மன்னன் துறவை மேற்கொள்கிறான். அவன் மகன் யசோதரன் மன்னனாகிறான். இவன் மனைவி அமிர்தமதி யானை பாகனின் இசையில் மயங்கி அவனுடன் கள்ள உறவு கொள்கிறாள். அமிர்தமதி மகன் யசோதரனுக்கும் அவன் தாய்க்கும் உணவில் நஞ்சு வைத்துக் கொல்கிறாள். யசோதரன் மகன் யசோதமதி மன்னனாகிறான். இவன் பிள்ளைகள் அபயருசி, அபயமதி இருவர் வேட்டைக்குச் செல்லும்பொழுது துறவி ஒருவரைச் சந்திக்கின்றனர். யசோதமதி. தனக்குப் பிறந்துள்ள இன்னல்கள் தீமையும், பாவமும் என்பதை அறிகிறான். இப்பிறப்பு உண்மைகளை மாந்தர்க்கு உரைப்பதே யசோதர காவியம்.

4. <u>சூளாமணி</u> :-

சூளாமணியின் ஆசிரியர் <u>தோலாமொழித் தேவர்</u>. விருத்தப்பாவால் அமைந்த இந்நூல் சமண சமயத்தைச் சார்ந்தது. 2331 பாடல்களையும் 12 சருக்கங்களையும் உடையதாக இந்நூல் விளங்குகிறது. ஸ்ரீபுராணம் எனப்படும் அருகத மாபுராணத்தைத் தழுவி இந்நூல் எழுதப்பட்டது.

சுரமை நாட்டு மன்னன் பயாபதிக்கு திவிட்டன், விசயன் என இருபிள்ளைகள். சிங்கத்தைத் திவிட்டன் அடக்குகிறான். அசுவகண்டனுடன் திவிட்டன் போரிட்டான். அசுவகண்டனை வென்று கொன்று அவன் மகள் சுயம்பிரபையை மணக்கிறான்.

சூளாமணி மண்ணுலகத்தையும், விண்ணுலகத்தையும் இணைத்த காப்பியமாகும். ஊடுபெற்ற முதலும் வளையுமத்திக் கூறும் இந்நூலில் திவிட்டன் முக்தி அடைந்த சிறப்பை கூறுகிறது.

இந்நூலுக்கு 'செங்கண் மையனொடும் மெய்யடுப்பு' என்று தோலாமொழித் தேவர் சேந்தன் அவைக்களத்தில் அரங்கேற்றினான் என்பர்.

5. <u>நீலகேசி</u>:

குண்டலகேசிக்கு மறுப்பு நூலாகத் தோன்றியது நீலகேசி. இதனை நீலகேசித் திரட்டு என்றும் அழைப்பர். ஆசிரியர் பெயர் தெரியவில்லை. 894 பாடல்களையும் 10 சருக்கங்களையும் கொண்ட இந்நூல் விருத்தப்பாவால் ஆனது. சமண சமயத்தைச் சார்ந்தவையாகும்.

பாஞ்சால நாட்டில் புண்டவர்த்தனம் என்ற நகருக்கருகேயுள்ள இடுகாட்டில் காளிக்கு உயிர்ப்பலி நடந்து வந்தது. சமண முனிவர் முனிச்சந்திரர் இதனைத் தடுத்து நிறுத்தினார். காளி கோபம் கொண்டு நீலி என்னும் பேயைக் காமலேகை என்ற அரசகுமாரி உருவில் முனிச்சந்திரனை மயக்க அனுப்பினாள். காமலேகை பின்வட்டம் தோற்று அவனிடம் மாணவியாகச் சேர்ந்தாள். பின்னர் சமணவாதியாக மாறினாள். சமண சமயத் தலைவியாக உயர்கிறாள்.

பெருங்கதை

கொங்குவேளிர் எழுதிய இந்நூல் சமண சமயத்தைச் சார்ந்தது. உதயணன் கதையைக் கூறும் இந்நூல் ஆசிரியப் பாவால் ஆனது. இந்நூல் 16,230 பாடல்களையும் 5 காண்டங்களையும் உடையது. நூல் முழுமையாகக் கிடைக்கவில்லை. 'கொங்குவேளிர் மாக்கதை' என்றும் அழைக்கப்படுகிறது.

குணாட்டியர் வடமொழியில் எழுதிய பிருகத்கதா என்ற நூலின் மொழிபெயர்ப்பு ஆகும். பிருகத் என்றால் பெரிய, கதா என்றால் கதை எனவே பெருங்கதை எனப்படுகிறது.

உதயணன் யாழை இசைப்பதில் வல்லவன். 'கோடபதி' எனும் யாழ். உதயணன் நண்பன் யூகி. இசையால் 'நளகிரி' எனும் யானையை அடக்கினான். யூகியின் படைத்துணையால் பிரச்சோதனன் படையை சூழ்ச்சியால் அடக்கி பின்பு மன்னன் பிரச்சோதனன் மகள் வாசவதத்தையை திருமணம் மணக்கிறான்.

## புராணங்கள்

புராணங்கள் வடமொழியில் இருந்து தமிழுக்கு வந்தவை ஆகும். தமிழ் தொன்மையில் எப்பவும் புராணங்கள் கடவுள்களோடு தொடர்பு உடையவை.

புராணங்கள் மகாபுராணங்கள், உபபுராணங்கள் என இரண்டாகப் பார்க்கப் பெறுகின்றன. புராணங்கள் பதினெட்டு வகைகள் உள்ளன. இவற்றில் பத்து சிவபுராணங்கள், நான்கு வைணவ புராணங்கள், இரண்டு பிரமபுராணங்கள் ஒன்று அக்னிபுராணம் ஒன்று சூரியபுராணம்.

### சிவபுராணங்கள்

1. சைவபுராணம்
2. பௌஷிக புராணம்
3. மார்க்கண்டபுராணம்
4. லிங்கபுராணம்
5. காந்தபுராணம்
6. வராகபுராணம்
7. கூர்மபுராணம்
8. மச்சபுராணம்
9. கூர்மபுராணம்
10. பிரமாண்டபுராணம்.

### வைணவ புராணங்கள்

1. கருடபுராணம்
2. நாரதீயபுராணம்
3. விஷ்ணுபுராணம்
4. பாகவதபுராணம்

### பிரமபுராணங்கள்

1. பிரமபுராணம்
2. பதுமபுராணம்

### அக்கினிபுராணம்

1. அக்னேயபுராணம்

## பிற புராணங்கள் :-

### கந்தபுராணம் :-

காஞ்சிபுரத்தில் வாழ்ந்த கச்சியப்ப சிவாச்சாரியார் வடமொழியில் எழுதிய 'சிவசங்கரதை' என்னும் நூலைத் தமிழில் கந்தபுராணம் என்ற பெயரில் இயற்றினார்.

முருகக்கடவுளின் பிறப்பு, அவரைக் கார்த்திகைப் பெண்கள் வளர்த்தல், சூரபதுமனை அழித்தது முருகக்கடவுளின் போரில், வள்ளி தெய்வானையை முருகப்பெருமான் மணமுடித்த நிகழ்ச்சிகள் போன்ற பல செய்திகள் இந்நூலில் கூறப்பட்டுள்ளன.

10436 பாடல்களையும் ஆறு காண்டங்களையும் கொண்டுள்ள இந்நூல் சைவசித்தாந்தக் கருத்துக்கள் மிகுதியாக இடம்பெற்றுள்ள இந்நூலை இயற்ற கச்சியப்ப சிவாச்சாரியாருக்கு முருகக்கடவுள் 'திகடச் சக்கரச் செம்முகம் ஐந்துளான்' என்ற அடியை எடுத்துக் கொடுத்ததாகச் சொல்வர். மேலும் முருகப்பெருமான் இரவில் வந்து அப்பாடல்களைத் திருத்தி வைத்தார் என்றும் கூறுவர்.

### திருவிளையாடல் புராணம் :-

மதுரைச் சொக்கநாதப் பெருமானைய சிவபெருமானின் திருவிளையாடல்களை இந்நூல் தொகுத்துரைக்கிறது. பரஞ்சோதியாரால் இந்நூல் இயற்றப்பட்டது. இந்நூலில் சிவபெருமான் மதுரையில் நிகழ்த்திய 64 திருவிளையாடல்கள் மிக அழகாகச் சித்தரிக்கப்பெற்றுள்ளன.

பாண்டியர்கள் வழிபட்ட ஆலவாய
சொக்கநாதரை முதன்மையாகக் கொண்ட
பரஞ்சோதியார் திருவிளையாடல் புராணத்தை
செய்திருப்பது குறிப்பிடத்தக்கது. இந்நூல்
மதுரைக்காண்டம், கூடற்காண்டம், திருஆலவாய்க்
காண்டம் என்ற மூன்று காண்டங்களையும்,
3363 பாடல்களையும் கொண்டுள்ளது.

அரிச்சந்திர புராணம் :

அரிச்சந்திரன் வரலாற்றைக் கூறும்
இந்நூல் 1225 பாடல்களைக் கொண்டுள்ளது.
வீரகவிராயர் அரிச்சந்திர புராணத்தை இயற்றியுள்ளார்.
இவர் பாண்டிய நாட்டைச் சேர்ந்தவர்.

எத்தனை சோதனைகள் வந்தாலும்
எவ்வளவு பொறுமை இழந்தாலும் துன்புற்றாலும்
இறுதியில் வாய்மையே வெல்லும் என்ற
உண்மையை அரிச்சந்திர புராணம் தெளிவுபடுத்துகிறது.

கூர்மபுராணம் :

அதிவீரராம பாண்டியரால் இயற்றப்பட்டது
கூர்மபுராணம். இது வடமொழியைத் தழுவி
எழுதப்பட்டது. சிவபெருமானின் பெருமைகளைத்
திருமாலின் வாயிலாக எடுத்துரைப்பது இந்நூல்.
இருகாண்டங்களையும் 97 அத்தியாயங்களையும்
3,717 பாடல்களையும் உடையது.

காசிக்காண்டம்

அதிவீரராம பாண்டியன் இயற்றிய
பிறிதொரு புராணம் காசிக்காண்டம்
எனப்படும். இந்நூல் பூர்வகாண்டம், உத்தர

காண்டம் என்ற இரு காண்டங்களையும் 100 அத்தியாயங்களையும் 2,526 பாடல்களையும் பெற்றுள்ளது. கதையின் சிறப்பு கவிதையால் பெருமை. கங்கைத் தீர்த்தத்தின் மேன்மை போன்றவை இப்புராணத்தில் கூறப்பட்டுள்ளன.

**ஸ்ரீபுராணம்:-**

சைன சமயத்தைச் சார்ந்த ஸ்ரீபுராணம் என்பதும் இந்நூல் வடமொழியில் உள்ள மகாபுராண சங்கிரகத்தின் மொழிபெயர்ப்பாகும். பூர்வபுராணம் ஆதிநாதர் புராணமாகவும், உத்தரபுராணம் 23 தீர்த்தங்கரர் வரலாறு உரைப்பதாகவும் அமைந்துள்ளன.

**மேரு மந்தரபுராணம்:-**

ஆசிரியர் வாமனாசாரியர் சமணர்கள் இதனைத் தங்களுடைய சமயசாரம் என்கின்றனர். இப்புராணம் ஆசையின் கொடுமைத் தெளிவாக தெளிவாக எடுத்துரைக்கிறது.

**துணை நூற்பட்டியல்:-**


1. தமிழ் இலக்கிய வரலாறு — முனைவர் ச. சுபாஷ் சந்திரபோஸ்
   இயல் பதிப்பகம்
   தஞ்சாவூர் - ஆண்டு - 2012

2. ~~[illegible]~~
   தமிழ் இலக்கிய வரலாறு — முனை. அ. ஆனந்தன்
   கண்மணி பதிப்பகம்

3. தமிழ் இலக்கிய வரலாறு — முனைவர். பு. இந்திராகாந்தி
   முனைவர். பொ. திராவிடமணி
   NCBH
   சென்னை - ஆண்டு - 2016